# சம்பந்தப்படுதலுக்குப் பணம் கொடுத்தல்

**சேவையைப் பயன்படுத்துபவர் மற்றும் பராமரிப்பாளர் என்போர் சம்பந்தப்படுதல் தொடர்பாக நாங்கள் பணம் கொடுக்கும் முறையிலுள்ள மாற்றங்கள் பற்றிய தகவல்.**

**மார்ச் 2014**

## ஒன்றுசேர்ந்து வேலை செய்தல்: சேவையைப் பயன்படுத்துபவர் மற்றும் பராமரிப்பாளர் சம்பந்தப்படுதல்

சேவையைப் பயன்படுத்துவோரும் பராமரிப்பாளர்களும் டிரஸ்டின் சொத்துக்களாக உள்ளனர். அவர்களின் சுகவீனம் தொடர்பான அனுபவத்துக்காக மாத்திரமன்றி அவர்களின் முழுமையான வாழ்வு அனுபவம் குறித்தும் அவர்கள் கண்டுகொள்ளப்படுகிறார்கள்.

ஒரு தெளிவான மற்றும் ஒழுங்கான முறையில் ஒவ்வொருவரினதும் பங்களிப்பையும் அடையாளங் கண்டு அவற்றுக்குப் பரிசளிக்க விரும்புகின்றோம். இதை நாங்கள் எவ்வாறு செய்கின்றோம், மற்றும் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக உள்ள சில மாற்றங்களை இந்த நூற்பத்திரம் குறிப்பிடுகின்றது. விரிவான தகவலுக்கு டிரஸ்ட்டின் கொள்கை பகுதி 19 என்பதை வாசிக்கவும்.

## சம்பந்தப்படுதலுக்கு நாங்கள் எவ்வாறு பணம் கொடுக்கின்றோம்

- தற்போது சம்பந்தப்படுதலுக்குக் காசாகப் பணம் கொடுக்கின்றோம்.
- 2014 மே மாதத்திலிருந்து, உங்கள் வங்கி அல்லது பில்டிங் சொசயிட்டி கணக்குக்கு நேரடியாக BACS (Bank Automated Clearing Service) மூலமாகப் பணக் கொடுப்பனவு செய்துகொள்ளப்படும்.
- சில விதிவிலக்குகள் இருக்கக்கூடும் – உங்கள் சம்பந்தப்படுதலை வழிப்படுத்துபவருடன் சரிபார்த்துக்கொள்ளவும்.
- வழமையாக, சம்பந்தப்படுதல் செயற்பாட்டிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள் பணம் கொடுக்கப்படுகின்றது. சில சேவைகளில் இது வேறுபடலாம்.

## எதற்காக BACS என்பதற்கு மாறுகின்றோம்?

- வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள முறையிலான பணக் கொடுப்பனவு செயல் முறைகளை வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றோம்.
- ஒரு பாதுகாப்பான மற்றும் அந்தரங்கமான முறையில் பொதுப்பட்ட ரீதியாக நாங்கள் தகவலை வைத்திருக்கலாம்.
- உங்கள் சம்பந்தப்படுதல் பணக்கொடுப்பனவுகள் பற்றிய ஒரு பதிவேட்டை நீங்கள் வேண்டிக்கொள்ளலாம்.

## சம்பந்தப்படுதலுக்கான சம்பள அளவுகள்

- சம்பள அளவுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் பற்றி உங்கள் சம்பந்தப்படுதலை வழிநடத்துபவரிடம் கேட்டுக்கொள்ளவும்.
- சம்பந்தப்படுதல் செயற்பாடுகள் அனைத்தும் சம்பளம் வழங்கப்படும் செயற்பாடுகள் அல்ல.
- பெரும்பாலான செயற்பாடுகளுக்கு, மணித்தியாலத்துக்கு £10 கொடுக்கின்றோம்.
- ஏனைய சேவைகள் குறிப்பான சம்பள அளவுகளை வைத்திருக்கக்கூடும்.
- பணம் பெற்றுக்கொள்ளாதிருக்க நீங்கள் தீர்மானிக்கலாம், ஆனால் நீங்கள் இன்னும் சம்பந்தப்படலாம்.
- உங்களுக்கான பணக் கொடுப்பனவை £20க்கு மேற்படாமல் வைத்திருக்க நீங்கள் தீர்மானிக்கலாம்.
- உங்கள் வாராந்தப் பணக் கொடுப்பனவுகளை £100க்கு மட்டுப்படுத்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்வோம்.

## செலவுகள்

- பிரயாணம் தொடர்பாகவும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஏனைய செலவுகள் தொடர்பாகவும் நாங்கள் பணம் கொடுப்போம்.
- செயற்பாட்டுக்கு முன்பாக செலவுகள் ஊழியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவை டிரஸ்டின் கொள்கைக்கு ஏற்றனவாக இருக்க வேண்டும்.
- செலவுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒரு வரவுச் சீட்டுக் கொடுக்கப்பட வேண்டும்.

## பெனிவிட்டுக்களும் வருமான வரியும் – உங்கள் பொறுப்புக்கள்

பணத்தை ஏற்றுக்கொள்ளுதல் உங்கள் பெனிவிட்டுக்கள் அல்லது வருமான வரி அந்தஸ்தைப் பாதிக்கலாம். இது நீங்கள் சம்பந்தப்படுதலைத் தடுக்கக்கூடாது – சம்பந்தப்படுதல் தொடர்பாக உங்களை வழிப்படுத்துபவருடன் உரையாடவும்.

பெனிவிட்டுக்கள் அல்லது வருமான வரி அந்தஸ்தைப் பாதிக்கக்கூடிய மேலதிக வருமானம் பற்றி பெனிவிட்டுக்கள் அல்லது வருமான வரி தொடர்பான அலுவலகத்துக்கு அறிவித்தல் உங்கள் பொறுப்பாகும்.

நீங்கள் பெனிவிட்டுக்கள் பெற்றுக்கொள்வதாக இருந்தால், சம்பளம் கொடுக்கப்படும் செயற்பாடுகளில் ஒழுங்கான முறையில் சம்பந்தப்படுவதற்கு முன்பாக, உங்கள் உள்ளூர் பெனிவிட்டுக்கள் அறிவுரையாளருடன் சரிபார்த்துக்கொள்ளவும்.

## அடுத்த நடவடிக்கைகள்

சம்பந்தப்படுதல் தொடர்பாக வழிப்படுத்துபவருடன் உரையாடவும். அவர் உங்களுக்குச் சரியான வழியைக் காட்டுவார்.
ஒரு பதிவுப் படிவத்தை நிரப்பி, எங்களின் சம்பந்தப்படுதல் பதிவேட்டில் சேர்ந்துகொள்ளவும்.
வங்கி விபரங்கள் தொடர்பான ஒரு படிவத்தை நிரப்பி, அதனை எங்கள் நிதி பற்றிய குழுவுக்கு அனுப்பவும். அது முக்கியமானதாக இல்லாவிட்டாலும், ஒரு மின் அஞ்சல் முகவரியை நீங்கள் கொடுத்தால், அது உதவியாக இருக்கும்.

## நினைவுகொள்ளவும்

சம்பந்தப்படுதல் செயற்பாடு ஒவ்வொன்றுக்கும் முன்பாக, நீங்கள் பதிவு செய்யப்படுகிறீர்கள் என்பதையும் சம்பளத்தின் அளவு மற்றும் எவ்வளவு பணம் உங்களுக்குக் கொடுக்கப்படும் என நீங்கள் எதிர்பார்க்கலாம் என்பதையும் ஊழியர்களுடன் உறுதிப்படுத்தவும்.
செலவுகளுக்காக நீங்கள் பணம் கோரினால், வரவுச் சீட்டுக்களைக் கொண்டுவரவும்.

## மாற்று வடிவங்கள்

பெரிய எழுத்து, பிறெயிலி, அல்லது வேறொரு மொழி போன்ற வேறொரு வடிவத்தில் இந்தத் தகவல் உங்களுக்குத் தேவைப்பட்டால், 020 8354 8737இல் அல்லது communications@wlmht.nhs.uk என்பதில் எங்களைத் தொடர்புகொள்ளவும்.